Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.182/2021

**Depositions of PW- 5**

| Name | திரு.பாலமுருகன் | Occupation | பணி ஓய்வு |
|---|---|---|---|
| Father’s name | வெங்கடசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of January 2026.

07.01.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 03.05.2015ம் தேதி ராஜபாளையம் தெற்கு காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளை O.P No.22902/2014ன்படி ராஜபாளையம் தெற்கு காவல்நிலைய குற்ற எண்.255/2015 பிரிவுகள்.406, 420 இதச ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற புகார் மனு மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளையிலிருந்து வரப்பெற்ற மனுவையும் JM ராஜபாளையம் கோர்ட்டார் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

புகார்தாரரின் சொந்த ஊர் சங்கரன்கோவில் தாலுகா பிள்ளையார்கோவில் கிராமம் என்றால் சரிதான். புகார் மனுவில் எந்த இடத்தில் வைத்து, எந்த தேதியில், எந்த நேரத்தில் ஆடு வாங்கினார்கள் என்பது குறித்து எந்தவித சங்கதிகளும்

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் அடித்தல் திருத்தல்கள் மற்றும் இடைச்சொருகல்கள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2 1/4 வருடம் கழித்து தான் புகார் மனு காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரை எங்கள் காவல்நிலையத்தில் பதிவு செய்ய எங்களுக்கு அதிகார வரம்பு இல்லை என்றாலும் பொதுவாக குற்றசம்பவம் நடந்த இடத்தில் தான் புகார் மனு கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி முதல் தகவல் அறிக்கை எங்கள் அதிகார வரம்பிற்குள் உட்பட்டது இல்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி முதல் தகவல் அறிக்கையானது எனது மேல் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் இவ்வழக்கின் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.